# வீட்டில் கருணை காட்டுதல்

பாடம் 15

ஆண்டவர் இயேசு தமது வாழ்நாளில் எப்போதும் நற்செயல்களில் ஈடுபட்டார். ஆவர் அனைவரிடமும் கருணை காட்டியமையால் பலர் அவரைத் தொடர்ந்து சென்றனர். சிறு பிள்ளைகள், நோயாளர், ஆதரவற்றோர், வயோதிபர் பலர் அவரைப் பின்தொடர்ந்து சென்றனர். அவர்களது தேவைகளை அறிந்து கருணை காட்டி பொறுமையுடன் அவற்றை நிறைவு பெறச் செய்தார்.

அவரது கருணையை அனுபவித்த ஒரு சிலரைப் பற்றி வேதாகமத்தில் ஆராய்வோம்.

ஒரு நாள் இயேசு தொழுகைக் கூடத்தை விட்டு சீமோன் வீட்டுக்குச் சென்றார். சீமோனின் வீட்டார் அவரை அன்புடன் வரவேற்றனர்.சீமோனின் மாமியார் கடுங்காய்ச்சலால் துன்புற்ற நிலையில் இருந்தார். அவர்கள் இயேசுவிடம் அவருக்காக வேண்டினார்கள். இயேசு அவரருகில் சென்று காய்ச்சல் அவளைவிட்டு நீங்கும்படி வேண்டிக் கொண்டார். உடனே காய்ச்சல் அவளைவிட்டு நீங்கிற்று. உடனே அவள் எழுந்து அவர்களுக்குப் பணிவிடை செய்தாள். இயேசுவின் கருணையை அனுபவத்தில் பெற்றுக் கொண்டவள் ஏனையவர்களுக்கு கருணை காட்டுதல் புதுமையான தொன்றல்ல.

இன்னுமொரு நாள் இயேசு கப்பர்நகூமில் ஒரு வீட்டில் இருப்பதை அந்த நகர வாசிகள் அறிந்தனர். முடக்குவாதமுற்ற ஒருவரும் கப்பர்நகூமில் இருந்தார். அவனுடைய நண்பர்கள் சிலர் அவரை இயேசுவிடம் கொண்டு செல்ல தீர்மானம் செய்தனர். மக்கள் கூட்டம் நிறைந்து இருந்தமையால் இயேசுவினருகில் கொண்டு செல்ல முடியாமல் இருந்தனர். என்ன செய்வது? ஏன்று யோசித்தார்கள். கடைசியாக அவர்கள் கூரைமேல் ஏறி ஓடுகளைப் பிரித்து அவ்வழியாய் மக்கள் நடுவில் அவரைக் கட்டிலோடு இயேசுவுக்கு முன் இறக்கத் தீர்மானித்தனர். நான்கு மூலைகளிலும் கட்டிலைக் கட்டி



மிக அவதானத்துடன் கட்டிலை இறக்கினர். நண்பர்களது நம்பிக்கையைக் கண்ட இயேசு மகிழ்ச்சி அடைந்தார். இயேசு முடக்குவாதமுற்றவரைப் பார்த்து, "நீர் எழுந்து உம்முடைய கட்டிலைத் தூக்கிக் கொண்டு உமது வீட்டுக்குப் போம்" என்றார். அவன் எழுந்து படுத்திருந்த கட்டிலையும் தூக்கிக் கொண்டு கடவுளைப் போற்றிப் புகழ்ந்தவாறு வீட்டுக்குப் போனான்.

இவ்வாறாக எம்மிடம் உதவி பெற்றுக் கொள்ள வீட்டுக்கு வருபவர்களுக்கு நாம் கருணை காட்ட வேண்டும் என இயேசு எம்மிடம் எதிர்பார்க்கின்றார்.

## செயற்பாடு

1. வேதாகமத்தில் லூக்கா 4:38-39, லூக்கா 5 : 17-26 பகுதிகளை வாசிக்கவும்.
2. உங்கள் வீட்டில் நீங்கள் கருணை காட்டிய சந்தர்ப்பங்கள் 3 எழுதுங்கள். நான் இயேசுவின் கருணையால் பார்வை பெற்றவன். சிறு பிள்ளைகளாகிய நீங்கள் செவிகொடுங்கள் எனது கதைக்கு.